பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 20 சனிக்கிழமை 02.04.2022 கதிர் 17

## 26 கிலோ கஞ்சா கொக்குவிலில் மீட்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்.02

யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்குப் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது 26 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

கொக்குவில் கிழக்குப் பகுதியில் ஓர் ☞2

# அரசுக்கு எதிராக யாழில் போராட்டம்









(இ.கலையமுதன்)

அத்தியாவசியப் பொருள்களின் விலை ஏற்றத்தைக் கண்டித்தும், தற்போதைய அரசை விரட்டியடிக்க மக்களை முன்வருமாறு கோரியும் யாழ்ப்பாணத்தில் இன்று கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் ☞2

## போராட்டங்களுக்கு அஞ்சி ஊரடங்கு போட்டது அரசு!

### இன்று மாலை 6 மணி முதல் திங்கள் காலை வரை

நாடளாவிய ரீதியில் இன்று சனிக்கிழமை மாலை 6 மணி முதல் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 6 மணி வரை ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படும் என அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை நாடு முழுவதும் மக்களை வீதிகளில் இறக்கி பெருந்த எடுப்பில் அரச எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுக்க எதிர்க்கட்சிகள் தயாரான நிலையில் அதற்கு முகம் கொடுக்க முடியாமல் அரசு ஊரடங்கைப் பிறப்பித்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

## நாடாளுமன்றம் இடைநிறுத்தம்?

நாடாளுமன்றக் கூட்டத்தொடரை ஒத்தி வைப்பதற்கு அல்லது தற்காலிகமாக இடை நிறுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன எனக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கம் பெரும்பான்மையை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதால், மேற்படி இரண்டில் ஒன்றை அரசாங்கம் தீர்மானிக்கும் சாத்தியக்கூறுகள் அதிகம் உள்ளன என்று அந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

புத்தாண்டு விடுமுறையுடன், நாடாளுமன்றத்துக்கு நீண்ட விடுமுறை வழங்கப்படக்கூடும் என்றும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# அவசரகாலச் சட்டத்தை உடன் மீளப்பெறுங்கள்

## கோட்டாவிடம் சுமந்திரன் வலியுறுத்து



இலங்கையில் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள அவசர காலச் சட்டத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உடனடியாக மீளப்பெற வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

அரசுக்கு எதிரான மக்களின் எதிர்ப்பையும் போராட்டங்களையும் இந்தச் சட்டத்தின் மூலம் அடக்க முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் எம்.பி. சுட்டிக்காட்டியுள்ளார். ☞2

## சமூக ஊடகச் செயற்பாட்டாளர் திசர அனுருத்த பண்டார கைது




சமூக ஊடகச் செயற்பாட்டாளர் திசர அனுருத்த பண்டார கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவர் கொழும்பு, முகத்துவார பொலிஸ் நிலையத்தின் குற்ற விசாரணைப் பிரிவில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.


கம்பளையைச் சேர்ந்த அவர், தண்டனைச் சட்டக் கோவையின் 120ஆம் இலக்க பிரிவின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்.

அரசுக்கு எதிராக சூழ்ச்சி விளைவித்தமைக் ☞2

## இராஜாங்க அமைச்சுப் பதவியை துறக்கிறார் ரொஷான் ரணசிங்க

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொலன்னறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ரொஷான் ரணசிங்க, தான் வகித்த இராஜாங்க அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்யத் தீர்மானித்துள்ளார்.

மே முதலாம் திகதி தான் பதவி விலக வுள்ளேன் என அறிவிப்பை அவர் விடுத்துள்ளார். ☞2



## 4 மணி நேரத்துக்கும் குறைவான மின்வெட்டு நாளை முதல் அமுல்!



மின்வெட்டு நேரம் நாளை முதல் குறைவடையும் என்று இலங்கை மின்சார சபையின் தலைவர் எம்.சி. பெர்டினாண்டோ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டுக்கு வரவிருக்கும் டீசல் ☞2

## மக்களின் தாக்குதலில் இருந்து தப்பிப்பிழைக்க பொது நிகழ்வைத் தவிர்த்துவரும் ஆளும் தரப்பு

மின்வெட்டு, சமையல் எரிவாயு தட்டுப்பாடு, எரிபொருள் நெருக்கடி மற்றும் பொருள்களின் விலையேற்றத்தால் நாட்டு மக்கள் கடும் கொதிப்பில் உள்ள நிலையில், அமைச்சர்கள் மற்றும் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொது நிகழ்வுகளைத் தவிர்த்து வருகின்றனர் என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

அரசு மீதான அதிருப்தியை மக்கள் தம் மீது காட்டக்கூடும் என்பதாலும், பாதுகாப்பைக் கருத்தில் கொண்டுமே அவர்கள் இந்த முடிவை எடுத்துள்ளனர் என்று தெரியவருகின்றது.

ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சாரம சம்பத் பங்கேற்ற நிகழ்வொன்றின்போது, அவர் மீது முட்டை வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# யாழில் அருண் சித்தார்த்தனுடன் இணைந்து குழப்பத்தை ஏற்படுத்திய இருவரும் பிலியந்தலையைச் சேர்ந்தவர்கள்



அருண் சித்தார்த்தனுடன் பிலியந்தலைப் பகுதியைச் சேர்ந்த இருவரே யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் போராட்டத்தில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

யாழில் நேற்று முன்னாள் எம்.பி. ஹிருணிகா தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தியின் போராட்டம் இடம்பெற்றது. அதன்போது தேசியக் கொடியுடன் அருண் சித்தார்த்தனுடன் வந்த இருவர் போராட்டக்காரர்களுடன் முரண்பட்டனர்.

அதில் ஒருவர் தனது கையடக்கத் தொலைபேசியில் காணொலிப் பதிவை மேற்கொண்டவாறே போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் முரண்பட்டார்.

இருவரும் பிலியந்தலைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

குறித்த இருவரையும், அவர்களை அழைத்துவந்த அருண் சித்தார்த்தனையும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் செருப்புக்களாலும், தடிகளாலும் அடித்துத் தாக்கினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழில் நாளை நடைபெறவிருந்த கண்டனப் பேரணி ஒத்திவைப்பு



(இ.கலையமுதன்)

நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்தில்கொண்டும், அன்னையரின் பாதுகாப்பைக் கருத்தில்கொண்டும் எமது பேரணிக்கான திகதி மாற்றப்பட்டுள்ளது. புதிய திகதி அனைவரும் கலந்து முடிவு செய்து அறிவிக்கப்படும்.

- இவ்வாறு வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் செயலாளர் ஆ.லீலாதேவி தெரிவித்தார். ஊடகங்களுக்கு இன்று கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணம் வந்தபோது, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் உண்மை நிலையை அறியும் முகமாக கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்த முற்பட்ட தாய்மார்கள், வயோதிபப் பெண்கள்மீது பொலிஸார் மேற்கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதலைக் கண்டித்தும், நீதி கிடைக்க வேண்டியும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். மத்திய பஸ் நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணம் முற்ற வெளியை நோக்கிச்செல்லும் கண்டனப்பேரணிக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

ஆனாலும், நாட்டின் நிலைமையைக் கருத்தில்கொண்டும், எமது அன்னையரின் பாதுகாப்பைக் கருத்தில்கொண்டும் எமது பேரணிக்கான திகதி மாற்றப்பட்டுள்ளது.

புதிய திகதி அனைவரும் கலந்து முடிவு செய்து அறிவிக்கப்படும். சிரமத்துக்கு மன்னிக்கவும். தங்கள் ஒத்துழைப்பு தொடர வேண்டும் - என்றார்.

## நீச்சல் தடாகத்தில் இருந்து இளைஞரின் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியொன்றின் நீச்சல் தடாகத்தில் இருந்து இளைஞர் ஒருவரின் சடலம் இன்று மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நகரைச் சேர்ந்த 6 பேர் குறித்த தனியார் விடுதியில் நேற்றிரவு தங்கியிருந்துவிட்டு இன்று அதிகாலை ஒரு மணியின் பின்னர் நீச்சல் தடாகத்தில் நீராடச் சென்றிருந்தார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இன்று காலை விடுதி நிர்வாகத்தினர் நீச்சல் தடாகத்தில் இளைஞர் ஒருவரின் சடலம் காணப்பட்டதை அவதானித்து அது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

தகவலை அடுத்து அங்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.




### இராஜாங்க அமைச்சுப் பதவியை .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் இராஜாங்க அமைச்சராக ரொஷான் ரணசிங்க செயற்பட்டு வருகின்றார்.

பதவி துறப்புக்கான காரணத்தைத் தெளிவுபடுத்தி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அவர் கடிதமொன்றையும் அனுப்பிவைத்துள்ளார்.

இராஜாங்க அமைச்சுப் பதவியை வகித்த நிமல் லான்சாவும் அண்மையில் பதவி துறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### சமூக ஊடகச் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காகவே திசர அனுருத்த பண்டார கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, சமூக ஊடகச் செயற்பாட்டாளரான திசர அனுருத்த பண்டார, சட்டத்தரணிகளின் உதவியைப் பெறுவதற்கு இடமளிக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

இந்நிலையில், கொழும்பு 6ஆம் இலக்க நீதிவான் நீதிமன்றத்தில் அவர் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### 4 மணி நேரத்துக்கும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையிருப்பை மின்சார சபைக்கு வழங்குவதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உறுதியளித்துள்ளது.

எனவே, நான்கு மணி நேரத்துக்கும் குறைவான மின்வெட்டு நாளை முதல் அமுல்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மின்சார சபைக்குத் தொடர்ந்து டீசல் விநியோகம் கிடைத்தால், விரைவில் மின்வெட்டை முடிவுக்குக் கொண்டுவர முடியும்.

இதேவேளை, இந்தியக் கடன் திட்டத்தின் கீழ் 40 ஆயிரம் மெற்றிக் தொன் அளவிலான டீசல் தாங்கிய கப்பல் நாட்டை வந்தடைந்துள்ளது.

இன்று மாலை இந்த டீசலை தரையிறக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும் - என்றார்.

### மக்களின் தாக்குதலில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வீடு கூட முற்றுகையிடப்பட்டுள்ளது. இந்நிலையிலேயே ஆளுங்கட்சியினர் நிகழ்வுகளைத் தவிர்த்து வருகின்றனர்.

### அவசரகாலச் சட்டத்தை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியின் இந்தத் தவறான நடவடிக்கையை நிராகரிக்குமாறு எனது சக நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கின்றேன் என்றும் சுமந்திரன் எம்.பி. மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கை முழுவதும் கோட்டாபய அரசுக்கு எதிரான மக்களின் போராட்டங்கள் தீவிரமடைந்துள்ள நிலையில் நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் அவசரகாலச் சட்டத்தை ஜனாதிபதி பிரகடனப்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### அரசுக்கு எதிராக ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் இன்று காலை 10 மணியளவில் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

மண்ணெண்ணெய், பெற்றோல், டீசல், சமையல் எரிவாயு, பாண் போன்ற அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிப்பைக் கண்டித்து இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

இதில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

### 26 கிலோ கஞ்சா ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டில் பட்டா ரக வகனத்தில் பொதி செய்யப்பட்ட நிலையில் கஞ்சா ஏற்றுப்பட்டுக் கொண்டிருந்த சமயமே பொலிஸார் இக்கஞ்சாவை மீட்டுள்ளனர்.

இவ்வாறு பொலிஸார் திடீரென சுற்றி வளைத்த சமயம் சந்தேக நபர்கள் கஞ்சாப் பொதிகள் மற்றும் வாகனம் என்பவற்றை கைவிட்டுத் தப்பியோடியுள்ளனர். அவற்றை கைப்பற்றிய யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## முடிவுரை முடிந்தது!

ஒரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர் தேர்தலைக் கூட முன்பின் எதிர்கொள்ளாத ஓர் இராணுவ அதிகாரியை, நேரடியாக ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தி, வெற்றி பெற வைத்து, நாட்டின் நிறைவேற்று அதிகார தலைவராக – அரசின் தலைவராக – நிலைநிறுத்தியமையின் விளைவை பொதுஜன பெரமுனவும் நாடும் எதிர்கொள்ளவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

நேரடி அரசியலுக்கு நுழைந்த கையோடே ஜனாதிபதியாகி, குறுகிய காலத்தில் மக்கள் செல்வாக்கை இழந்து, அவர்களினாலேயே விரட்டி அடிக்கப்படும் நிலைமைக்கு தள்ளப்பட்டிருக்கும் கோட்டாபய ராஜபக்ஷ போல, அவரை ஜனாதிபதியாக்கிய குற்றத்திற்காகப் பொதுஜன பெரமுன கட்சியும், அது உருவாகி, குறுகிய காலத்தில் அமோக வெற்றியீட்டி, ஆளும் கட்சியாக வந்த வேகத்திலேயே, தேய்ந்து பத்தோடு பதினோராவது கட்சியாகிவிடுமோ என்ற நிலைமைக்கு உள்ளாகி இருக்கின்றது.

ஆட்சி அதிகாரம் குரங்கின் கைப் பூமாலையான நிலைமைக்குச் சென்றிருக்கின்றது.

தாம் அதிகாரத்துக்கு வந்த கையோடு உயர் சிவில் நிர்வாகப் பதவிகளுக்கு முன்னாள் படை அதிகாரிகளையும் தளபதிகளையும் நியமித்து, நாட்டின் நிர்வாகப் கட்டமைப்பையே இராணுவ பாணிக்கு மாற்றுவதற்கு கோட்டாபய நடவடிக்கைகளை எடுத்தபோதே நிலைமை இப்படியெல்லாம் ஆகும் என்பது எதிர்பார்க்கப்பட்டதுதான்.

அரசியல் தலைமை என்பது கீழ்மட்டத்தில் இருந்து வரும் மக்கள் கருத்தியலை உள்வாங்கி, நிலைமையைத் தெளிந்து, அதனடிப்படையில் காய்களை நகர்த்துவது.

மேல் மட்டத்திலிருந்து தீர்மானங்களை எடுத்து, இராணுவப் பாணியில் கீழ்மட்டத்தில் மக்கள் மீது வலிந்து திணிப்பது அல்ல அரசியல்.

இந்த விடயம் புரியாத – அரசியலே தெரியாத – ஒருவரிடம் ஆட்சி அதிகாரத்தை ஒப்படைத்தமையின் விளைவை பொதுஜன பெரமுனவும் பொதுமக்களும் இன்று எதிர்நோக்கி நிற்கின்றனர்.

தட்டுப்பாடும், பற்றாக்குறையும், நெருக்கடிகளும், விலைவாசி உயர்வும் மிக மோசமான கட்டத்தில். அவற்றைச் சகிக்க முடியாத மக்கள் அவற்றிற்கு எதிரான தமது உணர்வலைகளை ஒன்றுகூடி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தி, கொட்டித் தீர்க்க முயல்கின்றனர்.

ஆனால், இராணுவப் பாணி எதேச்சதிகாரத் தலைவர், மக்களின் இந்த கருத்து வெளிப்பாட்டுக்கு இடமளிக்காமல், அதனை இரும்புக் கரம் கொண்டு அடக்க விழைகின்றார். பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழான அவரின் அவசரகால பிரகடனம் அதனைத்தான் வெளிப்படுத்தி நிற்கின்றது.

இந்தப் பத்தி எழுதப்படும் சமயத்தில் அவசரகால சட்டத்தின் கீழ் ஜனாதிபதி வெளியிட வேண்டிய ஒழுங்கு விதிகள் பற்றிய தகவல்கள் உறுதிப்படுத்தப்பட்டு வெளியாகவில்லை.

எனினும், தவறான அரசாட்சியினால் நாட்டில் ஏற்பட்டுள்ள மோசமான நிலைமைக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் முகமாக நாளை நாடு முழுவதிலும் மக்களை வீதிக்கு இறக்கும் பொது எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவிருக்கின்றன. அவற்றை முறியடித்து, மக்கள் கருத்தியல் வெளிப்பாட்டை அடக்கி, ஒடுக்கி கட்டுப்படுத்தவே இந்த அவசர நிலைப் பிரகடனம் செய்யப்படுகின்றது என்பது கண்கூடு.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியில் இருக்கும் எஞ்சிய காலம் முழுவதும் இத்தகைய மக்கள் எதிர்ப்பை அவர் முகம்கொள்ள வேண்டியவராகவே இருப்பார். ஏனெனில் நாட்டை மீளமுடியாத – மீட்கவே முடியாத – அத்தகைய மோசமான கட்டத்துக்குள் அவர் கொண்டு வந்துள்ளார். ராஜபக்ஷ குடும்பத்தின் அரசியல் செல்வாக்கின் முடிவுரையையும் தமது எதேச்சதிகார நடவடிக்கை போக்கால் அவரே எழுதி வைத்துவிட்டார் என்பதும் உண்மைதான்.

## நுகேகொட களேபரத்தில் கைதானோருக்கு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை பாய்ச்சலாம்!

### திலும் அமுனுகம இப்படிக் கூறுகிறார்




நுகேகொட ஆர்ப்பாட்டத்தில் கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தைப் பயன்படுத்தலாம் என இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

நுகேகொட ஆர்ப்பாட்டம் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து பொலிஸார் நீர்த்தாரை மற்றும் தடியடிப் பிரயோகம் நடத்தி நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

தற்போது இந்தச் சம்பவம் தொடர்பாக 54 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று நினைக்கவில்லை. மாறாக பஸ்ஸுக்குத் தீ வைத்த பின்னரே ஆர்ப்பாட்டக்காரர்களை கட்டுப்படுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

ஜனாதிபதி தனது வீட்டில் இருக்கும்போது தான் இந்த சம்பவம் இடம்பெற்றது. கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தை பயன்படுத்த முடியும்.

ஏனெனில், இது உண்மையில் பயங்கரவாதச் செயற்பாடாகும். எனினும், இவர்களுக்கு எதிராக எவ்வாறு வழக்குத் தொடரலாம் என்பதை பொலிஸாரே ஆதாரங்கள் கொண்டு மேற்கொள்வார்கள். ஆனால், கைது செய்யப்பட்டவர்களை பயங்கரவாதிகள் என்று நாம் கூறப்போவதில்லை.

ஆர்ப்பாட்டங்களை நடத்த அனைவருக்கும் உரிமையுள்ளது. எனினும், இதனால் அரச சொத்துக்கள் சேதப்படுத்தப்பட்டால் அது என்னைப் பொறுத்தவரை பயங்கரவாத செயற்பாடாகவே கருதப்படும். – எனத் தெரிவித்துள்ளார்.

## தேவை ஏற்பட்டால் சமூக ஊடகமுடக்கம்!

தேவை ஏற்பட்டால் நாட்டில் சமூக ஊடகங்கள் தொடர்பில் தற்போது நடைமுறையில் உள்ள சட்டங்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்கத் தயாராக உள்ளோம் என சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சிரேஷ்ட ஊடக பேச்சாளர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

மிரிஹானவில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சமூக ஊடகங்கள் ஊடாக மேலும் வன்முறையைத் தூண்டினால் அடுத்தகட்ட நடவடிக்கை என்னவாக இருக்கும் என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதற்குப் பதிலளித்த சிரேஷ்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் றோஹண –

சமூக ஊடகங்கள் மூலம் வன்முறைச் சம்பவத்தைச் செய்ய ஏதேனும் உந்துதல் அல்லது தூண்டுதலின் ஆபத்து இருந்தால், தற்போது உள்ள சட்டத்தின்படி செயற்பட வேண்டி ஏற்படும். – என்று தெரிவித்தார்.

## சாரதி அனுமதிப் பத்திரம் செல்லுபடியாகும் காலத்தை நீடித்து விசேட வர்த்தமானி

காலாவதியான சாரதி அனும திப்பத்திரங்களின் செல்லுபடியாகும் காலத்தை நீடித்து விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகமவால் மேற்படி வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, இன்றில் இருந்து ஜூன் மாதம் 30ஆம் திகதியுடன் காலாவதியாகும் அனைத்து சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும் காலம் காலாவதியாகும் திகதியிலிருந்து 06 மாதங்களாக நீடிக்கப்பட்டுள்ளது. மேலும், ஜூலை 01 ஆம் திகதி ஆரம்பமாகி செப்டெம்பர் 30ஆம் திகதியுடன் காலாவதியாகும் சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும் காலம் காலாவதியாகும் திகதியிலிருந்து 03 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

## சீமெந்தின் விலை மீண்டும் எகிறல்!



உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உற்பத்தி செய்யப்படும் சீமெந்து மூடையின் விலையை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி சீமெந்து மூடை ஒன்றின் விலை 500 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய விலை உயர்வின் மூலம் சீமெந்து மூடை ஒன்றின் புதிய விலை 2,350 ரூபா ஆக உயர்வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஜனாதிபதியின் இல்லத்தருகில் போராட்டத்தின் போது கைதானவர்களுக்காக 300 சட்டத்தரணிகள் களத்தில்!

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வீட்டின் முன்பாக இடம்பெற்ற மக்கள் போராட்டத்தின் போது கைது செய்யப்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் சார்பாக அதிகளவான சட்டத்தரணிகள் மிரிஹான பொலிஸ் நிலையத்தில் ஆஜராகியுள்ளனர்.

சுமார் 300 இற்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் இவ்வாறு ஆஜராகியுள்ளனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கைது செய்யப்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு சட்டத்தரணிகள் தமது சேவைகளை இலவசமாக வழங்கத் தீர்மானித்துள்ளனர் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

# திருப்பி அடிக்கத் தொடங்கியதா உக்ரைன்?

## ரஷ்ய எண்ணெய் கிடங்கு மீது குண்டுவீச்சு



உக்ரைன் எல்லையை ஒட்டிய ரஷ்யாவின் எரிபொருள் சேமிப்பு கிடங்கு மீது உக்ரைன் ராணுவ ஹெலிக் கொப்டர்கள் ரொக்கெட் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியதாக ரஷ்யா குற்றம்சாட்டி உள்ளது. இதை உக்ரைன் ராணுவம் உறுதிப்படுத்தாத நிலையில், போரை மேலும் தீவிரப்படுத்த அதிபர் புடின் கூறும் பொய்யாக இது இருக்கலாம் என மேற்கத்திய நாடுகள் சந்தேகம் தெரிவித்துள்ளன. உக்ரைனில் ஒரு மாதத்திற்கு மேலாக போர் தொடுத்து வரும் ரஷ்ய ராணுவம், துருக்கியில் கடந்த சில நாள்களுக்கு முன் நடந்த இருதரப்பு பேச்சில் படைகளை குறைத்துக் கொள்வதாக உறுதி அளித்தது. ஆனால், இந்த வாக்குறுதியை மீறி அடுத்த நாளே தலைநகர் கீவ் புறநகர்களில் கடுமையான தாக்குதல் நடத்தியது. இதனால், தங்களை தற்காத்துக் கொள்வதோடு நிற்காமல், எதிர்த்து தாக்குதல் நடத்த உலக நாடுகள் ஆயுத உதவி செய்ய வேண்டுமென உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி வலியுறுத்தி இருந்தார்.

இந்நிலையில், உள்ளூர் நேரப்படி நேற்று காலை 5.43 மணி அளவில், ரஷ்யாவின் பெல்கோரோட் பகுதியில் உள்ள ரஷ்ய அரசுக்குச் சொந்தமான எரிபொருள் சேமிப்பு கிடங்கு மீது உக்ரைனின் ராணுவ ஹெலிக்கொப்டர்கள் ரொக்கெட் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தினார்கள் என அம்மாகாண ஆளுநர் கிளாட்கோவ் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், மில் எம்ஐ-24 ரக ஹெலிக்கொப்டர்கள் தாக்குதல் நடத்தப்பட்ட எரிபொருள் சேமிப்பு கிடங்குப் பகுதியில் மிக தாழ்வாக பறந்து செல்வதாக காட்டப்பட்டுள்ளது. 2 ஹெலிக்கொப்டர்கள் மூலம் ரொக்கெட் குண்டுகள் வீசப்பட்டன எனவும், இதில் 2 பேர் காயமடைந்தனர் எனவும் ஆளுநர் கிளாட் கோவ் கூறி உள்ளார். ஆனால், இத்தக வலை உக்ரைன் ராணுவம் உறுதி செய்யவில்லை. தாக்குதல் நடத்தின என கூறப்படும் ஹெலிக்கொப்டர்கள் குடியிருப்பு பகுதியில் வெளிச்சமில்லாத அதிகாலை வேளையில் ரேடாரில் இருந்து தப்ப மிக தாழ்வாக பறந்து செல்கின்றன. தாக்குதல் நடந்த இடம் கார்கிவ் நகரில் இருந்து 40 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது.

ஏற்கனவே, கடந்த சில தினங்களுக்கு முன்பு ரஷ்யாவின் மில்லிரோவோ ராணுவ தளத்தின் மீது உக்ரைன் ராணுவம் குண்டுவீசி தாக்கியதாக கூறப்பட்டது. இதன் மூலம், உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி கூறியமை போல், அந்நாடு ரஷ்யாவில் புகுந்து பதில் தாக்குதல் நடத்தத் தொடங்கி விட்டதா என்ற கேள்வி எழுந்துள்ளது. அதே சமயம், இது ரஷ்ய அதிபர் புடினின் சதித் திட்டம் என மேற்கத்திய நாடுகள் குற்றம் சாட்டி உள்ளன. ரஷ்யாவில் உக்ரைன் ராணுவம் தாக்குதல் நடத்தியதாகக் கூறி, போரை மேலும் தீவிரப்படுத்த புடின் நடத்தும் நாடகம் என்று மேற்கத்திய நாடுகள் கூறுகின்றன. அதற்கு ஏற்றார் போல், உக்ரைனில் போரை தீவிரப்படுத்த ரஷ்யா காய் நகர்த்தி வருகிறது என்றும் அவை கூறியுள்ளன.

### இனிமேல் போர் ஓயாது

உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி வெளியிட்ட வீடியோவில், "நாட்டின் வடக்கு மற்றும் மத்திய பகுதியில் இருந்து ரஷ்ய படைகள் வெளியேறுகின்றமை என்பது தென்கிழக்கில் புதிய சக்திவாய்ந்த தாக்குதல்களுக்கு அவர்கள் திட்டமிடும் ராணுவ தந்திரமாகும். அவர்களின் நோக்கங்களை நாங்கள் அறிவோம். எங்களுக்கு கடினமாக இருக்கும் மற்ற பகுதிகளில் கவனம் செலுத்துவதற்காக அவர்கள் விலகிச் செல்கிறார்கள். போர் இனியும் ஓயாது" என்றார்.

### செர்னோபிள்ளில் இருந்து ரஷ்ய படைகள் ஓட்டம்

போரால் கடுமையாக பாதிக்கப்பட்ட செர்னோபிள் நகரில் இருந்து ரஷ்ய படைகள் நேற்று அதிகாலை முழுமையாக வெளியேறின. அங்கு நாட்டின் மிகப்பெரிய அணுமின் நிலையம் அமைந்துள்ளது. ரஷ்ய படைகள் செர்னோபிள் நகரை சுற்றி வளைத்ததும், அணு மின் நிலையத்தை சுற்றிய பகுதிகளில் பதுங்கு குழி வெட்டி உள்ளனர். இதன் காரணமாக கதிர்வீச்சு கசிவு ஏற்பட்டு, ரஷ்ய வீரர்கள் பாதிக்கப்பட்டதாகவும், இங்கிருந்தால் விபரீதம் நிகழும் என அஞ்சிய அவர்கள் வெளியேறுவதாகவும் உக்ரைன் அரசின் மின் நிறுவன அதிகாரிகள் கூறுகின்றனர்.

### போரை பெரிதாக்கும் அமெரிக்கா- சீனா குற்றச்சாட்டு

சீன வெளியுறவுத்தகவல் தொடர்பாளர் ஜாவோ லிஜியன் நேற்று அளித்த பேட்டியில், "உக்ரைன் போரை தூண்டி விட்டதே அமெரிக்காதான். போரையும் நாளுக்கு நாள் ஊதி பெரிதாக்கி வருகிறது. உக்ரைன் போரின் முதல் குற்றவாளியே அமெரிக்காவும், நேட்டோ நாடுகளும்தான். சோவியத் யூனியன் உடைந்ததுமே நேட்டோவை அமெரிக்கா கலைத்திருக்க வேண்டும். 1999 முதல் கடந்த 20 ஆண்டுகளில் உலகின் கிழக்குப் பகுதியில் ஆயிரம் கிலோ மீற்றருக்கு ரஷ்யாவின் எல்லை வரையில் நேட்டோ விரிவாக்கம் செய்துள்ளன. இந்த அமைப்பில் 16 நாடுகள் இருந்த நிலையில், இப்போது 30 நாடுகள் உள்ளன," என்றார்.

### தினமும் 10 லட்சம் பரல் மசகு எண்ணெய் விடுவிப்பு: - விலையை கட்டுப்படுத்த பைடன் அறிவிப்பு

உக்ரைன் போரால், ரஷ்யாவின் எரிபொருள் சப்ளை தடை செய்யப்பட்டுள்ளதன் காரணமாக, உலகெங்கிலும் பெற்றோல், டீசல், காஸ் விலை உயர்ந்து வருகிறது. இதில் அமெரிக்காவும் தப்பவில்லை. அமெரிக்காவில் வரும் நவம்பரில் இடைக்காலத் தேர்தல் நடக்க உள்ள நிலையில், எரிபொருள் விலை உயர்வு அரசியல் ரீதியாக அதிபர் ஜோ பைடனுக்கு நெருக்கடியை ஏற்படுத்தி உள்ளது. இதனால் எரிபொருள் விலை உயர்வை கட்டுப்படுத்த, அமெரிக்கா தனது கையிருப்பில் உள்ள எரிபொருள் சேமிப்பில் இருந்து நாள் ஒன்றுக்கு 10 லட்சம் பரல் மசகு எண்ணெயை அடுத்த 6 மாதத்திற்கு விடுவிக்கும் என பைடன் அறிவித்துள்ளார். இதன் மூலம், அமெரிக்காவில் எரிபொருள் விலை குறைய வாய்ப்புள்ளது. இதன் மூலம், கையிருப்பு சேமிப்பில் இருந்து 180 பரல் மசகு எண்ணெயை அமெரிக்கா விடுவிக்க உள்ளது. கடந்த 50 ஆண்டு கால வரலாற்றில் இவ்வளவு பெரிய எண்ணிக்கையிலான பேரல்களை அமெரிக்கா விடுவித்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### ரஷ்யாவுக்கு 'வால்' ஆட்டிய 2 தளபதிகள் பதவி பறிப்பு

உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி, ராணுவ உறுதிமொழியை மீறினார் என 2 ராணுவ தளபதிகளின் பதவியை பறித்து நேற்று உத்தரவிட்டார். அவர் வெளியிட்ட வீடியோவில், "உக்ரைன் உளவுத்துறை அமைப்பான எஸ்.பி.யுவின் உள்நாட்டு பாதுகாப்புத் தலைமை தளபதி, கெர்சன் பிராந்திய உளவுத்துறை தலைவர் ஆகியோர் தங்களின் தாய்நாடு எது என்பதை தீர்மானிப்பதில் குழப்பம் அடைந்துள்ளனர். உக்ரைன் மக்களுக்கு விசுவாசமாக இருப்போம் என்ற ராணுவ உறுதிமொழியை அவர்கள் மீறியமையால் அவர்களின் பதவி பறிக்கப்படுகிறது," என்றார். இவர்கள் ரஷ்யாவுக்கு ஆதரவாக செயற்பட்டமையால் ஜெலன்ஸ்கி இந்த முடிவை எடுத்தேன் என, மறைமுகமாக கூறியுள்ளார்.

### மீண்டும் பேச்சு

துருக்கியின் இஸ்தான்புல்லில் உக்ரைன், ரஷ்யா சிறப்பு பிரதிநிதிகள் சமீபத்தில் நேரடியாக நடத்திய பேச்சில் எந்த முக்கிய முடிவும் எட்டப்படவில்லை. இந்நிலையில், மீண்டும் காணொலி மூலமாக இருதரப்பு பேச்சு நேற்று தொடங்கியது.

### கீவ், செர்னிவ்வில் படைகள் குறைப்பு

செர்னோபிள் போலவே, தலைநகர் கீவ் பிராந்தியத்தின் வடக்குப் பகுதியில் இருந்தும், செர்னிவ் நகரில் இருந்தும் ரஷ்ய படைகள் நேற்று வாபஸ் பெறப்பட்டன. மேற்கு உக்ரைனில் தொடர்ந்து ரஷ்ய படைகள் குறைக்கப்பட்டு அவை அனைத்தையும் கிழக்கு உக்ரைனுக்கு அனுப்பி அங்கு முழுமையான தீவிர போரில் ரஷ்யா களமிறங்கும் என அஞ்சப்படுகிறது. இதற்கிடையே, மரியுபோலில் மனிதநேய பாதை வழியாக மக்களை வெளியேற்ற முயன்ற 45 பஸ்களை ரஷ்ய வீரர்கள் நேற்று தடுத்து நிறுத்தினர்.

### கவச வாகனம் அனுப்பும் ஆஸி

ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி நேற்று முன்தினம் காணொலி வாயிலாக உரையாற்றினார். அப்போது ஆயுதங்களை வழங்கும்படி வலியுறுத்தினார். அவரது கோரிக்கையை ஆஸ்திரேலியா உடனடியாக ஏற்றுக் கொண்டு, அந்நாட்டின் சிறப்பு தயாரிப்பான புஷ்மாஸ்டர் கவச வாகனத்தை அனுப்புவதாக உறுதி அளித்துள்ளது. இது குறித்து ஆஸ்திரேலிய பிரதமர் மோரிசன் அளித்த பேட்டியில், "எங்கள் பிரார்த்தனைகளை மட்டுமல்ல, ஆயுதங்கள், துப்பாக்கிகள், வெடி பொருள்கள், மனிதாபிமான உதவிப்பொருள்கள், எங்களின் பிரத்யேக கவச வாகனங்கள் என அனைத்தையும் உக்ரைனுக்கு வழங்குகிறோம். போயிங் சி-17 குளோப்மாஸ்டர் சரக்கு விமானம் மூலம் உதவிப்பொருள்கள் அனுப்பப்படும்" என்றார். இதே போல், காமிகேஸ் எனும் அதிநவீன டிரோன்களையும், பீரங்கி உள்ளிட்ட ஆயுத உதவிகளை வழங்க இங்கிலாந்து முடிவு செய்துள்ளது.



# விமானங்கள் மோதல்

## 4 விமானிகள் சாவு

தென்கொரியாவில் பயிற்சி விமானங்கள் நடுவானில் மோதியமையால் 4 விமானிகள் உயிரிழந்தனர். தென்கொரிய விமானப் படைக்குச் சொந்தமான, உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட கேடி-1 ரகத்தைச் சேர்ந்த 2 விமானங்கள், சச்சியோன் பகுதியில் நேற்று வழக்கமான பயிற்சியில் ஈடுபட்டன.

பயிற்சிக்கு புறப்பட்ட 5 நிமிடங்களில் நடுவானில் பறந்து கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக 2 விமானங்களும் நேருக்கு நேர் மோதி சிதறின. இதில் 2 விமானங்களிலும் பயணித்த பயிற்சி விமானிகள், பயிற்சியாளர்கள் 4 பேரும் பலியாகினர். விபத்து நடந்த இடத்தில் மீட்பு பணி நடக்கிறது. விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தப்படுகிறது.

# சொத்து வரி உயர்வுக்கு தலைவர்கள் கண்டனம்
# மத்திய அரசினால்தான் வரி உயர்ந்துள்ளது!

## அமைச்சர் நேரு விளக்கம்



தமிழகத்தில் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளின் சொத்து வரிகளை உயர்த்தி தமிழக அரசு அறிவிப்பு வெளியிட்டதற்கு கட்சித் தலைவர்கள் பலரும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

தற்போது அறிவிக்கப்பட்டுள்ள சொத்துவரி உயர்வு தமிழகம் முழுவதும் நடைமுறைக்கு வரவிருக்கிறது. முதலமைச்சரின் பார்வைக்கு வராமல் இத்தகைய அறிவிப்பு செய்யப்பட்டிருக்கும் என நினைக்கிறேன்.

ஏற்கனவே, வரலாறு காணாத பெற்றோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை உயர்வினால் அனைத்து பொருள்களின் விலையும் உயர்ந்து கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிற பொதுமக்கள் இந்த சொத்து வரி உயர்வினால் மேலும் பாதிக்கக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

எனவே, தற்போது அறிவிக்கப்பட்டுள்ள சொத்து வரி உயர்வை ஒரே கட்டமாக நடைமுறைக்கு கொண்டு வராமல், ஆண்டுக்கு 10 சதவீத வரி உயர்வு என்ற அடிப்படையில் மறுபரிசீலனை செய்து புதிய அறிவிப்புகளை வெளியிட வேண்டும், என்று தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி கூறியுள்ளார்.

தமிழக அரசு, தற்போது உயர்த்தியிருக்கும் சொத்து வரி மக்களைப் பாதிக்கும் என்பதால் அதனை திரும்பப் பெற வேண்டும். சொத்து வரி உயர்வால் சாதாரண மக்கள்தான் பெருமளவு பாதிக்கப்படுவார்கள். தமிழ்நாட்டின் தற்போதைய சூழலில் சொத்து வரியை உயர்த்தாமல், மாற்றுத்திட்டத்தின் மூலம் வருவாயைப் பெருக்க தமிழக அரசு முன்வர வேண்டும், த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் தெரிவித்திருக்கிறார்.

தமிழகம் முழுவதும் சொத்து வரியை 100 சதவீதம் வரை உயர்த்தி இருக்கிற தி.மு.க. அரசுக்கு கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன். இதுதான் நீங்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு தரப் போவதாக சொன்ன விடியலா?

கொரோனாப் பாதிப்புக்கு பிறகு முழுமையான இயல்பு நிலை இப்போதுதான் ஏற்படத் தொடங்கி இருக்கும் நிலையில், இப்படி ஒவ்வொன்றாக மக்கள் தலையில் இடி விழுவதுபோல் அறிவிப்புகளை வெளியிடுவது மனசாட்சி இல்லாத செயல். எனவே, சொத்து வரி உயர்வை உடனடியாக திரும்பப் பெறவேண்டும் என வலியுறுத்துகிறேன் என்று அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன் கூறியுள்ளார்.

இந்த நிலையில் மத்திய அரசு விதித்த நிபந்தனையின் காரணமாகவே சொத்து வரி உயர்த்தப்பட்டுள்ளது என்று அமைச்சர் கே.என்.நேரு விளக்கம் அளித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் கூறும்போது, வரியை உயர்த்தாவிட்டால் உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதி கிடைக்காது என மத்திய அரசு கூறியது. தமிழகத்தில் கடந்த 24 ஆண்டுகளாக சொத்து வரி உயர்த்தப்படவில்லை, என்று குறிப்பிட்டிருக்கிறார்.

# சொத்து வரி உயர்வு மக்களுக்குச் சுமை
# முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் பேட்டி



தேர்தல் வழக்குகளில் கைதாகி ஜாமீனில் வந்துள்ள முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் ராயபுரம் பொலிஸ் நிலையத்தில் இன்று கையெழுத்திட்டு நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது, சொத்து வரியை அரசு உயர்த்தி மக்களுக்கு சுமையை ஏற்படுத்தி இருக்கிறது. பொருளாதார மேதைகளை அரசு நியமித்து 300 நாள்கள் ஆகிறது. ஆனால், பொருளாதார நடவடிக்கையை மீட்க எந்தவித செயலும் தற்போது வரை இல்லை. வரியை உயர்த்தாமல் பொருளாதாரத்தை மேம்படுத்தியது அ.தி.மு.க. அரசுதான். அ.தி.மு.க. ஆட்சியில் எந்தவித கட்டணமும் உயர்த்தப்படவில்லை

வரக்கூடிய நாள்களில் மின் கட்டணம், பால் விலை, பேருந்துக் கட்டணம் ஆகியவையும் உயரலாம். அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் சொத்து வரியை உயர்த்த பரிந்துரைத்த நிலையில் எதிர்த்துவிட்டு இப்போது இரவோடு இரவாக சொத்து வரி உயர்வு அறிவிப்பை வெளியிட்டுள்ளனர்.

5 வருட ஆட்சி முடியும்பொழுது கூடுதலாக 5 லட்சம் கோடி ரூபா கடனாக மாறும். அ.தி.மு.க. ஆட்சியில் சட்டம், ஒழுங்கு சிறப்பாக இருந்தது. ஆனால், இப்போது அந்த நிலைமை இல்லை. தி.மு.க. அரசின் தவறுகளை தொகுத்து மத்திய அரசிடம் வழங்குவோம், என்று ஜெயக்குமார் கூறினார்.




# நாம் தமிழர் கட்சியின் சீமான்
# மயங்கி விழுந்தமையால் பரபரப்பு

திருவொற்றியூரில் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து ஆறுதல் கூறிய நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் திடீரென மயங்கியமை பரபரப்பை ஏற்படுத்தியது.

திருவொற்றியூர், அண்ணாமலை நகர் பகுதியில் வீடுகள் இடிக்கப்பட்ட நிலையில், பாதிக்கப்பட்ட மக்களை நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் இன்று சந்தித்தார். அதன்பின் செய்தியாளர்களை சந்தித்தார்.

செய்தியாளர் சந்திப்புக்கு பிறகு திடீரென சீமான் மயங்கி விழுந்தார். உடனே அம்புலன்ஸ் மூலம் அவர் அருகிலுள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். இதனால், அப்பகுதியில் சிறிது பரபரப்பு ஏற்பட்டது.

# தமிழ்நாட்டுக்கு தரவேண்டிய 20,860 கோடி ரூபா நிதியை
# உடனே விடுவிக்க நிதியமைச்சரிடம் ஸ்டாலின் மனு

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நான்கு நாள் பயணமாக டெல்லிக்குச் சென்றார். அங்கே இந்தியப் பிரதமர் மோடி உட்பட பலரையும் அவர் சந்தித்தார். மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனையும் அவரது இல்லத்துக்கு சென்று சந்தித்துப் பேசினார்.

தமிழகத்தின் நிதி தொடர்பான பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றை அவரிடம் மு.க.ஸ்டாலின் கையளித்தார் என செய்திகள் வெளியாகியுள்ளன. இது தொடர்பாக தமிழக அரசு செய்திக்குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த செய்திக் குறிப்பில், 2015-2020 காலகட்டத்திற்கு 14ஆவது நிதிக்குழு தமிழ்நாட்டில் உள்ள உள்ளூராட்சிகளுக்கு அடிப்படை மானியமாக 7,899.69 கோடி ரூபாவினைப் பரிந்துரைத்தது. ஆனால், மொத்தமுள்ள 12,525 கிராமப் பஞ்சாயத்துகளில், 2900 கிராமப் பஞ்சாயத்துகளில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறாததால், 548.76 கோடி ரூபா அடிப்படை மானியத்தை ஒன்றிய அரசு விடுவிக்க வில்லை. நீதிமன்றத்தில் வழக்குகள் இருந்தமையால் இந்த 2900 கிராமப் பஞ்சாயத்துகளில் தேர்தல்கள் அப்போது நடத்த இயலவில்லை.

இந்த அரசு பொறுப்பேற்றப் பின்னர், 2900 கிராமப் பஞ்சாயத்துகளில் கடந்த ஒக்டோபர் 6 மற்றும் 9ஆம் திகதிகளில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத் தப்பட்டு, உள்ளூராட்சிப் பிரதிநிதிகள் தங்கள் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இதைப்போன்று 14 ஆவது நிதிக்குழு 2016-17 முதல் 2019-20 வரையிலான காலத்தில் உள்ளூராட்சி அமைப்புகளுக்கான செயல்பாட்டு மானியமாக தமிழ்நாட்டுக்கு 2,524.20 கோடி ரூபா பரிந்துரை செய்துள்ளது. அந்த மானியத்தொகையில் பரிந்துரைக் காலத்தில் ஒன்றிய அரசு 2016-17 ஆம் ஆண்டுக்கான செயல்பாட்டு மானியமாக 494.09 கோடி ரூபாவை விடுவித்துள்ளது.

மானியங்களைப் பெறுவதற்கான அனைத்து நிபந்தனைகளையும் நிறைவேற்றியபோதும், பயன்பாட்டுச் சான்றிதழை அனுப்பிய நிலையிலும், 2017 - 18 ஆம் ஆண்டுகளுக்கான செயல்பாட்டு மானியம் தமிழ்நாட்டிற்கு விடுவிக்கப்படவில்லை. இதனைத் தொடர்ந்து 2018-19 மற்றும் 2019-20 ஆம் ஆண்டுகளுக்கான மானியமும் விடுவிக்கப்படவில்லை. இருப்பினும், 2017-18 ஆம் ஆண்டுகளுக்கான செயல்பாட்டு மானியத்தினை ஏனைய பெரும்பாலான மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு விடுவித்துள்ளது.

எனவே, அடிப்படை மானிய நிலுவைத் தொகையான 548.76 கோடி ரூபாவையும் செயல்பாட்டு மானியம் 2,029.22 கோடி ரூபாயையும் தமிழகத்திற்கு விரைந்து விடுவிக்க வலியுறுத்தப்படுகிறது.

தற்போது பெருந்தொற்றின் தாக்கம் குறைந்து வந்தாலும், மாநிலம் இன்னும் கடும் நிதிச் சுமையில் உள்ளது. பெருந்தொற்றினால், சுகாதாரக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும், மருத்துவக் கருவிகள் மற்றும் மருந்துகளை கொள்முதல் செய்யவும், ஏழை எளிய மக்களுக்கு நலத் திட்டங்களைச் செயல்படுத்தவும் மாநில அரசிற்கு கூடுதல் செலவினங்கள் ஏற்பட்டுள்ளன.

சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டு நிலுவைத் தொகையான 13,504.74 கோடி ரூபாய் உட்பட 20,860.40 கோடி ரூபாய் ஒன்றிய அரசிடம் நிலுவையில் உள்ளது. மாநிலம் தனது நிதி நெருக்கடியிலிருந்து மீண்டு வர, இந்த நிலுவைத் தொகையை உடனடியாக விடுவிக்க வேண்டும் என ஒன்றிய அரசிற்கு வலியுறுத்தப்படுகிறது. சரக்கு மற்றும் சேவை வரியை அறிமுகப்படுத்திய பொழுது, மாநிலத்தின் வருவாய் பாதுகாக்கப்படும் என்று ஒன்றிய அரசு அளித்த



வாக்குறுதியின் அடிப்படையில், மாநிலம் தனது நிதி சார்ந்த அதிகாரத்தைக் கைவிட்டது. கடந்த 5 ஆண்டு களில், உறுதியளிக்கப்பட்ட பாதுகாக்கப்பட்ட வருவாய்க்கும், வசூலிக்கப்பட்ட வருவாய்க்கும் இடையே பெரும் இடைவெளி இருந்துள்ளது. பெருந்தொற்றிற்கு முன்னரே, இத்தகைய போக்கு காணப்பட்டது. அதன்பின் இந்த இடைவெளி அதிகரித்துக்கொண்டே வந்துள்ளது. கொரோனா பெருந்தொற்றின் தாக்கம் குறைந்து வந்தாலும், மாநிலத்தின் வருவாய் இன்னும் அதிகரிக்க வில்லை. இந்நிலையில், 30.06.2022 அன்று, சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டுத் தொகை வழங்கும் காலம் முடிவுக்கு வருகிறது. இதன் விளைவாக, 2022-23 நிதியாண்டில், தமிழ்நாடு ஏறத்தாழ 20,000 கோடி ரூபா வருவாய் இழப்பைச் சந்திக்க நேரிடும்.

இழப்பீடு வழங்கும் காலத்தை, ஜூன் 2022 க்குப் பின்னர் குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டிக்க வேண்டும் என்று ஒன்றிய அரசிற்கு வலியுறுத்தப்படுகிறது, என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஊரடங்கோ, இராணுவக் குவிப்போ பிரச்சினைகளுக்குத் தீர்வாக மாட்டாது

## கிண்ணியா நகரசபை உறுப்பினர் தெரிவிப்பு

(ஹஸ்பர்)



தற்போது இந்நாட்டில் மக்கள் போராட்டங்களால் ஏற்பட்டிருக்கின்ற அசாதாரண சூழ்நிலைகளை சீர்செய்வதற்கு ஊரடங்கு சட்டமோ, இராணுவ, பொலிஸ் குவிப்போ தீர்வாக அமையப் போவதில்லை என கிண்ணியா நகரசபை உறுப்பினர் எம்.எம்.மஹ்தி தெரிவித்துள்ளார். நேற்று வெள்ளிக்கிழமை அவரால் வெளியிடப்பட்டுள்ள ஊடகஅறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

தற்போது இந்நாட்டில் ஏற்பட்டுள்ள விலை ஏற்றம், டொலர், எரிபொருள்,எரிவாயு தட்டுப்பாடு மின் துண்டிப்பு, வரிசைகள், மரணங்கள் என்பவற்றால் மிகவும் மோசமாக பாதிக்கப்படுகின்ற மக்கள் ஆர்ப்பாட்டங்களிலும், போராட்டங்களிலும், ஈடுபடுகின்றமையையும் ஆட்சியாளர்களின் அலுவலகங்களையும் இல்லங்களையும் சுற்றிவளைக்கின்றமையையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

மக்களின் இவ்வாறான எதிர்ப்பு நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்காகஅரசாங்கம் ஊரடங்கு சட்டத்தையும் பொலிஸ், இராணுவத்தைக் குவித்து கண்ணீர்ப்புகை பிரயோகம், நீர்த்தாரை பிரயோகத்தைச்செய்கின்றனர்.

ஜனாதிபதியின் இல்லத்தை சுற்றி வளைத்த மக்கள் அமைச்சர்களினதும் நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் இல்லங்களைச் சுற்றி வளைக்க சற்றும் தயங்கப் போவதில்லை.

இந்நாடும், நாட்டு மக்களும் தாங்கள் முகங்கொடுக்கின்ற பிரச்சினைகளிலும் துன்பங்களிலும் இருந்து மீளுவதற்காக மேற்கொள்ளும் இவ்வாறான எதிர்ப்பு நடவடிக்கைகளை மேலும் விஸ்தரிக்க இடமளிக்காது அரசாங்கமும் அமைச்சரவையும் ஆட்சியை கைவிட்டு. புதிய அரசாங்கம் ஒன்றை அமைக்க வழிவிடுவது சிறந்த தீர்வாக அமையும்.- என அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.





# மடத்தடி மீனாட்சி அம்மனுக்கு மகா கும்பாபிஷேக குடமுழுக்கு

(காரைதீவு சகா)

அம்பாறை, நிந்தவூர், மாட்டுப்பளையில் உள்ள வரலாற்றுப் பிரசித்தி பெற்ற அருள்மிகு மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்தின் ஆவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்ட மஹா கும்பாபிஷேக குடமுழுக்குப் பெருவிழா எதிர்வரும் புதன்கிழமை06.04.2022 இல் நடைபெறவுள்ளது. அதற்கு முன்னதாக 4ஆம் திகதி திங்கட்கிழமையும், 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் அம்மனுக்கும் பரிவாரமூர்த்திகட்கும் எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவம் நடைபெறவிருக்கிறது.

கும்பாபிஷேக பிரதம குருவாக ஆலய பிரதமகுருவும் கிழக்கிலங்கையின் பிரபல சிவாச்சாரியாரியாருமான சிவாகம வித்யாபூஷணம் சிவாச்சார்யதிலகம் பிரதிஸ்டாதிலகம்ஜோதிடவித்யாதத்துவநிதி விபுலமணி சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் செயற்படுகிறார்.

இன்று 2ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை 5மணிக்கு கர்மாரம்பத்துடன் கிரியைகள் யாவும் ஆரம்பமாகின. எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவம் நாளை மறுதினம் திங்கள் கிழமை காலை 8 மணி முதல் அடுத்த நாள் செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3மணிவரை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எண்ணெய்யை ஆலயத்தில் விநியோகிக்க பரிபாலனசபை ஏற்பாடு செய்துள்ளது என ஆலயத்தலைவர் கி.ஜெயசிறில் தெரிவித்தார்.

செவ்வாய்க்கிழமை எண்ணெய்க்காப்பு நிறைவுற்றகையோடுபிற்பகல் 4மணியளவில் ஆலய முன்றிலில் ஒரு மணிநேர 'சூரசம்ஹாரம்', 'காத்தவராயன்' ஆகிய இரு வடமோடி நாட்டுக்கூத்துகள் நடைபெறவுள்ளன.

மறுநாள் மஹா கும்பாபிஷேகம் 6ஆம் திகதி புதன்கிழமை காலை 9.12மணி முதல் 10.27மணி வரையுள்ள சுப வேளையில் இடம்பெற அருள் பாலித்துள்ளது.

ஆலயகுருசிவஸ்ரீசகோவர்த்தசர்மா ஒழுங்கமைப்பில் சர்வசாதகராக ஆரியபாஷா விற்பன்னர் சிவஸ்ரீ சண்முக மயூரவதனக் குருக்களும், பிரதிஸ்டாகுருவாககிரியாஜோதி சிவஸ்ரீ வே.யோகராசாக் குருக்களும் செயற்பட கோ. ஜனபாலச்சந்திரன் (ஆஸ்திரேலியா) அவர்களின் உதவியுடன் மகேஸ்வர பூஜை இடம்பெறும். கும்பா பிஷேகத்தை தொடர்ந்து 24தினங்கள் மண்டலாபிசேக பூஜைகளும் அதனைத் தொடர்ந்து சங்காபிசேகமும் இடம்பெறுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மனைவியைக் குத்திக் கொன்ற கணவனைத் தேடி வலைவீச்சு!

## மட்டு. ஏறாவூரில் சம்பவம்



மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள சவுக்கடி கிராமத்தில் மூன்று பிள்ளைளின் தாயொருவர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

புதன் மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், சவுக்கடி முருகன் கோவில் வீதியை அண்டி வசிக்கும் 38 வயதுடைய பெரியான் சிவரஞ்சனா என்பவரே மார்புப் பகுதியில் கத்தியால் குத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

கத்தியால் குத்தப்பட்டு, இரத்தம் வழிந்தோடிய நிலையில் அவர் வீட்டு வாசலில் வீழ்ந்து கிடந்துள்ளார்.

உறவினர்களால் சடலம் மீட்கப்பட்டு, உடற்கூறாய்வுப் பரிசோதனைகளுக்காக ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் ஈடுபட்டவர் எனக் கூறப்படும் சந்தேக நபரான பெண்ணின் கணவன் சிவரஞ்சன் தயாளகுமார் (வயது 40) தலைமறைவாகியுள்ள நிலையில், அவரைத் தேடும் பணியில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

சிவரஞ்சனா அவரது கணவனால் ஏற்கெனவேயும் பலமுறை தாக்கப்பட்டுள்ளார் எனவும், கொலை செய்யப்படுவதற்கு சில நாள்களுக்கு முன்னர் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் சிவரஞ்சனாவுக்கு தலையில் ஏற்பட்ட காயத்துக்கு 13 தையல் கட்டுக்கள் இடப்பட்டு, குணமடைந்துள்ளார் எனவும் உறவினர்கள் தெரிவித்தனர்.

குடும்ப வறுமை காரணமாக சிவரஞ்சனா 16 வருடங்களுக்கும் மேலாக அவ்வப்போது மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்றே தனது குடும்பத்தையும் பிள்ளைகளையும் பராமரித்து வந்தவர் என்றும் உறவினர்கள் தெரிவித்தனர்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக ஏறாவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

# ஆசிரியர்கள் பற்றாக்குறையை நிவர்த்திக்கக் கோரி கவனவீர்ப்பு

## திருமலை முத்து நகர் முஸ்லிம் வித்தியாலயத்தில்




திருகோணமலை கல்வி வலயத்துக்குட்பட்ட முத்து நகர் முஸ்லிம் வித்தியாலயத்தில் நிலவும் ஆசிரியர்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யக் கோரி, பாடசாலைக்கு முன்னால் நேற்று முன்தினம் காலை கவன வீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# கட்டார் உலகக்கிண்ண கால்பந்தாட்டத் தொடர் விளையாடும் அணிகளின் குழு விவரம் வெளியானது




22 ஆவது உலகக்கிண்ண கால்பந்தாட்டத் தொடரில் விளையாடும் 32 அணிகளில் 29 அணிகள் ஏற்கனவே உறுதி செய்யப்பட்ட நிலையில், லீக் சுற்றில் யார்– யாருடன் மோதுவது என்பதை குலுக்கல் மூலம் தெரிவுசெய்யும் நிகழ்வு நேற்று சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் கட்டார் தலைநகர் டோஹாவில் நடத்தப்பட்டது. இதன்போது, தற்போதுவரை தேர்வாகியுள்ள அணிகள் 8 பிரிவாகப் பிரிக்கப்பட்டன.

இதில் ஏ பிரிவில் கட்டார், ஈக்வடோர், செனகல், நெதர்லாந்து அணிகளும், பி பிரிவில் இங்கிலாந்து, ஈரான், அமெரிக்கா, தகுதிச்சுற்றில் தெரிவாகவுள்ள அணியும், சி பிரிவில் ஆர்ஜென்டினா, சவுதி அரேபியா, மெக்சிக்கோ, போலந்து நாடுகளும், டி பிரிவில் நடப்பு சம்பியனான பிரான்ஸ், டென்மார்க், துனிசியா, தகுதிச் சுற்றில் தெரிவாகவுள்ள மற்றுமொரு அணியும் இடம்பெற்றுள்ளன.

இ பிரிவில் முன்னாள் சம்பியன்கள் ஸ்பெயின், ஜேர்மனி மற்றும் ஜப்பான், தகுதிச் சுற்றில் வெற்றிபெற்று வரும் அணியும், எவ் பிரிவில் பெல்ஜியம், கனடா, மொரொக்கோ, குரோஷியா அணிகளும், ஜி பிரிவில் பிரேசில், செர்பியா, சுவிஸ்ஸர்லாந்து, கமரூன் நாடுகளும், எச் பிரிவில் போர்த்துக்கல், கானா, உருகுவே, தென்கொரியா ஆகிய அணிகளும் இடம் பிடித்துள்ளன.

இவற்றில் மூன்று அணிகள் எவை என்பது, பிளே ஓவ்களின் வெற்றி – தோல்விகளின் அடிப்படையில் இந்த ஆண்டு ஜூன் மாதத்திற்குள் உறுதி செய்யப்படவுள்ளன. தொடரின் ஆரம்பப் போட்டியில், உலகக்கிண்ணத் தொடரை நடத்தும் கட்டார் அணியும் ஈக்வடோர் அணியும் ஒன்றையொன்று எதிர்கொள்ளவுள்ளன.

22ஆவது உலகக்கிண்ணக் கால்பந்தாட்டத் தொடர் எதிர்வரும் நவம்பர் 21ஆம் திகதி முதல் டிசம்பர் 18ஆம் திகதி வரை கட்டாரில் எட்டு மைதானங்களில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## காயத்திலிருந்து மீண்ட சூர்யகுமார் யாதவ் இன்றைய போட்டியிலும் விளையாடவில்லை



காயத்தில் இருந்து மீண்ட மும்பை இந்தியன்ஸ் அணி வீரர் சூர்யகுமார் யாதவ் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்கு எதிராக இன்று களமிறங்குவார் என அணியின் தலைமை செயற்பாட்டு இயக்குநர் ஸகீர்கான் முன்னதாக தெரிவித்திருந்தபோதிலும் அவர் இன்றும் விளையாடவில்லை.

மும்பை இந்தியன்ஸ் அணி வீரரான சூர்யகுமார் யாதவ், மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான ரி-20 தொடரில் காயம் ஏற்பட்டு, பெங்களூருவில் உள்ள தேசிய கிரிக்கெட் அகாடமியில் சிகிச்சையும் பயிற்சியும் எடுத்து வந்தார்.

காயத்திலிருந்து மீண்டு அண்மையில் மும்பை சென்றடைந்த அவர், 3 நாள்கள் தனிமைப்படுத்துதலின் பின்னர் மும்பை அணியுடன் தற்போது இணைந்துள்ளார். இதனை மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைமை செயற்பாட்டு இயக்குநர் ஸகீர்கான் உறுதிப்படுத்தி, அவர் இன்றைய போட்டியில் நிச்சயம் களமிறங்குவார் என முன்னர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




## மியாமி ஓபன் டென்னிஸ் தொடர் இறுதி அல்கராஸ் கார்பியா – கஸ்பர் ரூட் மோதல்!

மியாமி ஓபன் டென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு இரண்டாவது அரையிறுதிப் போட்டியில், ஸ்பெயினின் கார்லோஸ் அல்கராஸ் கார்பியா வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவின் இரண்டாவது அரையிறுதிப் போட்டியில், ஸ்பெயினின் கார்லோஸ் அல்கராஸ் கார்பியா, போலந்தின் ஹூபர்ட் ஹர்காக்ஸை எதிர்கொண்டார். அந்தப் போட்டியில் இருவரும் விட்டுக்கொடுக் காமல் சிறப்பாக விளையாடியமையால் இரண்டு செட்டுகளுமே டை பிரேக் வரை நீடித்தன.

இதில், இறுதிவரை நிதானத்துடன் விளையாடிய அல்கராஸ் கார்பியா, 7-6, 7-6 என்ற நேர் செட்களில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்தார்.

நாளை நடைபெறவிருக்கும் இறுதிப் போட்டியில், கார்லோஸ் அல்கராஸ் கார்பியா, நோர்வேயின் கஸ்பர் ரூட்டை எதிர்கொள்ளவிருக்கிறார்.

## ஆப்கானிஸ்தான் அணியின் பந்துவீச்சுப் பயிற்சியாளராக பாகிஸ்தானின் முன்னாள் வேகப்பந்துவீச்சாளர் உமர்குல்




பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவரான உமர்குல் 2020 ஆம் ஆண்டு தனது கிரிக்கெட் போட்டிகளிலிருந்தான ஓய்வை அறிவித்தார். அதன்பின் உள்ளூர் கிரிக்கெட் அணிகளுக்கு பயிற்சியாளராக செயல்பட்டுவந்தார்.

இந்த நிலையில் ஆப்கானிஸ்தான் அணியின் புதிய பந்துவீச்சு பயிற்சியாளராகவும் ஆலோசகராகவும் அவர் நியமிக்கப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. அவர் வரும் நான்காம் திகதி அணியுடன் இணைவார் என்று தெரியவருகிறது.

பாகிஸ்தான் சூப்பர் லீக்கில் பயிற்சியாளராக பணியாற்றிய அனுபவம் உள்ள உமர் குல், ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபையுடனான உடன்படிக்கையின்படி, மூன்று வார காலம் பணியாற்றுவார். அவரது பணி திருப்திகரமாக இருந்தால் அவரது பதவிக்காலம் நீடிக்கப்படலாம் என்று தெரியவருகிறது.

உள்ளூர் போட்டிகளில் பயிற்சியாளராக இருந்த நிலையில் தற்போது சர்வதேச அணியில் பயிற்சியாளராக இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. ஆப்கானிஸ்தான் பந்து வீச்சாளர்களுக்கு மிகவும் உதவியாக இருப்பேன். எனது அனுபவத்தை அவர்களுக்கு சிறந்த முறையில் வழங்குவேன், என்று உமர் குல் தெரிவித்திருக்கிறார்.

# நாட்டின் தற்போதைய பிரச்சினைகளுக்கு எந்தத் தலைவரிடமும் தீர்வு இல்லையாம்!



## இப்படிக்கூறுகிறார் அங்கஜன் எம்.பி.

தற்போதைய பிரச்சினைக்கு எந்த அரசிடமும் எந்ததலைவரிடமும் உடனடித் தீர்வு இல்லை. தற்போதுள்ள சிக்கலுக்குள் தீர்வு பெற வேண்டுமாக இருந்தால் நாங்கள் எல்லோரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனவும் வன்முறை இல்லாமல் போராட்டங்களை மேற்கொண்டே தீர்வைப் பெறலாம் எனவும் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இல்லம் முற்றுகையிடப்பட்டமை தொடர்பாக ஊரெழுவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

ஒரு சில அசாதாரண சம்பவங்கள் நாட்டில் ஏற்பட்டிருக்கின்றன. மிகப்பெரிய சவாலான நிலைமை இன்று இலங்கையில் ஏற்பட்டிருக்கின்றது. விலைவாசிகள் உயர்ந்துள்ளன. எரிபொருளுக்குத் தட்டுப்பாடு, மின்சாரம் இல்லை, வாழ்வாதாரம் பெரிய அளவில் பாதிக்கப்பட்டு இருக்கின்றது. இது மக்களின் முன்னேற்றத்துக்குத் தடையாக இருக்கின்றது. இயல்பு வாழ்க்கைக்கு பெரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. இது மிகவும் கஷ்டமான விடயம்.

ஆனாலும் யாழ். மாவட்ட மக்களைப் பொறுத்தவரை இது புதிதல்ல. இது தெற்கு மக்களுக்கு புதியதொரு சம்பவமாகவே இருக்கும். அதற்காக ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்று அது வன்முறையாக மாறி இருக்கின்றது.

கடந்த காலத்தில் நாங்கள் வன்முறையில் இருந்து வந்த மக்கள் மீண்டும் அதனை நோக்கிப் போகக் கூடாது என்பது என்னுடைய விருப்பம். மக்களுடைய போராட்டத்தின் வேதனையை உணரக்கூடியதாக இருக்கின்றது. போராட்டத்தை அமைதியாகச் செய்ய வேண்டும். வன்முறை இல்லாமல் போராட்டங்களை செய்து தீர்வை நோக்கிச் செல்ல முடியும்.

எந்தஅரசிடமும்எந்தத்தலைவரிடமும் உடனடித் தீர்வு இல்லை. தற்போதுள்ள சிக்கலுக்குள் தீர்வு பெற வேண்டுமாக இருந்தால் நாங்கள் எல்லோரும் ஒன்றிணைந்து எங்களால் முடிந்த ஆலோசனைகளை, முயற்சிகளை வழங்கி ஒரு தீர்வை காண வேண்டுமே தவிர வன்முறை ஒருபோதும் தீர்வாகாது.

யாருக்கும் வக்காலத்து வாங்க வேண்டிய அவசியம் இல்லை. யாருடைய உதவியாலும் மக்களால் நான் தெரிவு செய்யப்படவில்லை. மக்களால் மட்டுமே நான் தெரிவுசெய்யப்பட்டேன். எந்த ஓர் அரசாங்கத்துக்கும் தலைவருக்கும் வக்காலத்துவாங்க வேண்டியது எனது நோக்கமல்ல. தற்போதுள்ள பிரச்சினையை தீர்ப்பதற்கு என்னால் முடிந்த அனைத்து ஒத்துழைப்புகளையும் நான் செய்யத் தயாராக இருக்கிறேன். – என்றார்.

# ஆர்ப்பாட்ட போர்வையில் கலவரம் ஏற்படுத்தும் செயற்பாடுகளை வேடிக்கை பார்க்க முடியாது

## சரத் வீரசேகர காட்டம்



ஆர்ப்பாட்டம் எனும் போர்வையில் கலவரத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது எனவும், இவற்றுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் பொலிஸ் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

நுகேகொட ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற பகுதிக்கு சென்று, நிலைமைகளை பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர் –

நாட்டில் பொருளாதார பிரச்சினையொன்று இருப்பதை நாம் அறிவோம். எரிவாயுப் பிரச்சினை, எரிபொருள் பிரச்சினை, மின்சாரப் பிரச்சினை என்பதால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இதுதொடர்பாக நடவடிக்கை எடுக்க அரசாங்கம் என்ற ரீதியில் நாமும் வேலை செய்து கொண்டு தான் இருக்கிறோம். ஆனால், ஆர்ப்பாட்டம் எனும் போர்வையில் சொத்துக்களை சேதப்படுத்துவதையோ பஸ்ஸுக்குத் தீ வைப்பதையோ எம்மால் அனுமதிக்க முடியாது.

மக்களின் பாதுகாப்பே எமக்கு முக்கியமாகும். இதனால் சாதாரண பொது மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இது சாதாரண ஓர் ஆர்ப்பாட்டமாக தெரியவில்லை. இந்தச் சூழ்நிலையைப் பார்க்கும்போது இது தெளிவாகத் தெரிகின்றது.

இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டு டொலரைக் கொண்டுவர முடியுமா? டீசலைக் கொண்டுவர முடியுமா? உண்மையில், இதன் பின்னணியில் அடிப்படைவாதக் குழுவொன்றே உள்ளது.

வெளியாகியுள்ள காணொளிகளில் இவர்கள் எவ்வாறான ஆயுதங்களுடன் இதில் கலந்து கொண்டிருந்தார்கள் என்பது தெரிகின்றது.

பொலிஸ் அமைச்சர் எனும் ரீதியில் இதனை ஏற்றுக் கொள்ள முடியாது. நாட்டில் ஏன் இவ்வாறான பொருளாதாரப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது என்பதை மக்களும் சிந்திக்க வேண்டும்.

மக்களுக்கு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட ஜனநாயக ரீதியாக உரிமையுள்ளது. ஆனால், ஆர்ப்பாட்டம் எனும் போர்வையில் கலவரத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளுக்கு நாம் எதிர்காலத்திலும் அனுமதிக்கப்போவதில்லை. ஜனாதிபதி இதுவரை எந்தவோர் ஆர்ப்பாட்டத்தையும் எதிர்க்கவில்லை. எதிர்க்காலத்திலும் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடலாம்.

எவ்வாறாயினும் இதுபோன்றதொரு சம்பவத்தை நாம் இனிமேல் பார்த்துக் கொண்டிருக்கப்போவதில்லை. இந்தச் சம்பவத்துக்கு பொறுப்பான அனைவருக்கு எதிராகவும் நாம் நடவடிக்கை எடுப்போம்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஒருவரேனும் நாட்டுக்கு ஒரு டொலரைக் கொண்டுவந்துள்ளார்களா? – இல்லை. இந்தப் பிரச்சினையைத் தீர்க்க யோசனையை முன்வைத்துள்ளார்களா? – இல்லை. இதுதான் இங்குள்ள பிரச்சினையே.

நாட்டின் பிரச்சினையைத் தீர்க்க துளியளவும் ஒத்துழைக்காத தரப்பினர்தான் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். –எனத் தெரிவித்துள்ளார்.

## மொரட்டுவ மேயரின் இல்லம் முன்பும் பதற்றம்



மொரட்டுவ மேயர் சமன்லால் பெர்னாண்டோவின் இல்லத்துக்கு அருகில் பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேயரின் வீட்டுக்கு முன்பாக ஆர்ப்பாட்டக்காரர்கள் குழுவொன்று திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதன் காரணமாக இவ்வாறு பதற்றநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மொரட்டுவ குருச சந்திப் பகுதியில் இருந்து காலி வீதியை மறித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் பின்னர் வில்லோரா வத்தை பகுதியிலுள்ள மொரட்டுவ மேயரின் இல்லத்துக்குப் பேரணியாகச் சென்றனர். இதனால் பதற்ற நிலை ஏற்பட்டது.

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவால் உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனு

உயர் நீதிமன்றத்தில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அடிப்படை உரிமை மனுவொன்றை தாக்கல் செய்துள்ளது.

தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்குவதற்கான எரிபொருளை மின்சார சபைக்கு விநியோகிக்குமாறு வலுசக்தி அமைச்சுக்கு உத்தரவிடுமாறு கோரியே உயர் நீதிமன்றத்தில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# "நான்தான் நன்றாக செய்தேன்" என்று கூறிய ஜனாதிபதிக்கு தக்க பதிலடி கொடுத்த மக்கள்

## இராதாகிருஷ்ணன் சாட்டை

நான் தான் நன்றாக செய்தேன் என்று கூறிய ஜனாதிபதிக்கு மக்கள் பதில் வழங்கியுள்ளார்கள். இதனைப் புரிந்து கொண்டு எதிர்கால நடவடிக்கைகளை ஜனாதிபதி திட்டமிட வேண்டும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர்இவ்வாறுதெரிவித்தார்.அவர்மேலும்தெரிவிக்கையில்–

இலங்கை அரசியல் வரலாற்றில் முதன்முறையாக ஒரு ஜனாதிபதியின் வீட்டை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தியது இதுவே முதல் முறையாகும். அதற்கு காரணம் இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார சிக்கல் காரணமாக மக்கள் எந்தளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதையே அது எடுத்துக் காட்டுகின்றது.

ஜனாதிபதிக்கு எதிராக அவரின் பதவியிலிருந்து வெளியேறுமாறு போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் அநேகமானவர்கள் இளைஞர்களே. இதே இளைஞர்கள் தான் அன்று கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக வரவேண்டும்என்றுமுன்னின்றுவாக்களித்தார்கள். ஆனால் இன்று அதே இளைஞர்கள் ஜனாதிபதியை பதவி விலகி வீட்டுக்குச்செல்ல வேண்டும் என்று கோஷம் இடுகின்றார்கள். அந்தளவிற்கு இளைஞர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஜனாதிபதிக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டம் எந்தவிதமான அரசியல் கட்சிகளின் தலையிலோ அல்லது பொது அமைப்புகளின் தலையிலோ இல்லாமல் மக்களாகவே முன்வந்து இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருக்கின்றார்கள். இது போன்ற இன்னும் பல போராட்டங்கள் இடம்பெறும். எனவே இதை புரிந்து கொண்டு ஜனாதிபதி உரிய தீர்வினை எடுக்க வேண்டும். – என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.04.2022இல் வெளியிடப்பெற்றது.